## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## Ang Mo Kio Tamil Methodist Church

**22nd செப்டம்பர் / September 2024 ஞாயிறு ஆராதனை**

YAF Sunday

† ***ஆராதனைக்கு அழைப்பு*** — ***திரு. ஜான் நேசன்***
Call to Worship — Mr. John Nesan

***இறைவணக்கப்பாடல்*** — ***பாடகர் குழு***
Introit — Choir

***ஜெபம்*** — ***திரு. ஜான் நேசன்***
Prayer — Mr. John Nesan

***தொடக்க பாடல்*** — ***சபையார் இணைந்து***
† Opening Song — Congregation

**பகலோன் கதிர்போலுமே**

*1. பகலோன் கதிர்போலுமே*
*இயேசுவின் ராஜரீகமே*
*பூலோகத்தில் வியாபிக்கும்,*
*நீடூழி காலம் வர்த்திக்கும்*

*2. பற்பல ஜாதி தேசத்தார்*
*அற்புத அன்பைப் போற்றுவார்;*
*பாலரும் இன்ப ஓசையாய்*
*ஆராதிப்பார் சந்தோஷமாய்*

*3. நல் மீட்பர் ராஜ்யம் எங்குமே*
*சிரேஷ்ட பாக்கியம் தங்குமே*
*துன்புற்றோர் ஆறித் தேறுவார்,*
*திக்கற்றோர் வாழ்ந்து பூரிப்பார்.*

*4. பூலோக மாந்தர் யாவரும்*
*வானோரின் சேனைத் திரளும்*
*சாஷ்டாங்கம் செய்து*
*போற்றுவார்,*
*"நீர் வாழ்க, ராயரே" என்பார்.*

***மாறி வாசித்தல்*** *38ம்* ***ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
† "சங்கீதம் 116" — Congregation
"கர்த்தரைத் துதியுங்கள்"
Psalter Reading – "Psalm 116"

† ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

***சிறப்புப் பாடல்*** — YAF
Special Song

† ***காணிக்கைப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

**கர்த்தருக்குக் காணிக்கை இதோ**

***கர்த்தருக்குக் காணிக்கையிதோ! தம்மையே தந்த***
***கர்த்தருக்குக் காணிக்கை! இதோ!***

**கர்த்தருக்குக் காணிக்கையாய்ப்**
**பத்திலொன்று நான் கொடுப்பேன்,**
**சத்தியக் கிறிஸ்து நாதர்**
**சபையை வர்த்திக்கவேணும்.**

*1. அநியாயம் நீங்க வேணும், - உலகிலே மெய்*
*அறிவு வளர வேணும்,*
*தனியேக மெய்த்தேவனை - நந்தேசத்தில்*
*சகலரும் போற்ற வேணும்,*
*கனிவாய்ப் போதகர் வேதம்*
*கற்றறிந்து சொல்லவேணும்.*
*கணக்காய் இதன் செலவு*
*கட்டி வரவேணும், அய்யா!*

*2. ஆபிரகாம் பத்திலொன்றையே - மெல்கிசே தேக்குக்-கு*
*அனைத்திலும் தந்தையே!*
*மா பிரியமாக வாசித்தேன், - இஸ்ரயேல் பெத்தேல்*
*வள்ளற்குச் செய்பொருத்தனையே*
*ஆண்டவர் பரன் அவர்கட்*
*கனைத்தும் ஆசீர்வதித்துத்*
*தாபரம் தமதடி கீழ்த்*
*தந்தளித்த தெல்லாம் கேட்டேன்.*

*3. கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்தேன் - இதோ! இத்தனை*
*கூடினதைக் கொண்டிதோ வந்தேன்,*
*நஞ்சைவிளைவினி லோர்பாகம் - சேர்த்து வைத்தேனான்,*
*நாலாவகை வரத்திற் கொஞ்சம்,*
*புஞ்சை பல போகத்திலும்*

*போட்டு வைத்தே னான்குறுணி*
*புத்தகக் கணக்கில் கண்ட*
*சிந்தனை தொகையுமாச்சு*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. மேபெல் ராபர்ட்***
Scripture Reading — Mrs. Mabel Robert
***வெளி 1 : 4 - 8***
Revelation 1 : 4 - 8

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>**தெய்வன்பின் வெள்ளமே**</u>

*1. தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,*
*மெய்ம் மனதானந்தமே!*
*செய்ய நின்செம்பாதம் சேவிக்க இவ்வேளை*
*அய்யா, நின்அடி பணிந்தேன்.*

*2. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல*
*எந்தாய் துணிவேனோ யான்?*
*புந்திக்கமலமாம் பூமாலை கோர்த்து நின்*
*பொற்பதம் பிடித்துக் கொள்வேன்.*

*3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்*
*தேவே தவறிடினும்,*
*கூவி விளித்துந் தன் மார்போடணைத் தன்பாய்*
*யாவும் பொறுத்த நாதா!*

*4. மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்*
*மோக ஏக்கம் யாவும்*
*தாக்கிடத் தடுமாறித் தயங்கிடும் வேளையில்,*
*தூக்கித் தற்காத்தருள்வாய்,*

*5. ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்*
*பூசைப் பீடம் படைப்பேன்;*
*மோச வழிதனை முற்று மகற்றியேன்*
*நேசனே நினைத் தொழுவேன்.*

*6. மரணமோ, ஜீவனோ. மறுமையோ, பூமியோ,*
*மகிமையோ, வருங்காலமோ,*
*பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ*
*பிரித்திடுமோ தெய்வன்பை?*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***வெளி 1 : 8***
Revelation 1 : 8

***8. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing